Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

# 2019 Public Examination

# Tamil

## Continuers Level

**Wednesday 23 October: 2 pm Australian Eastern Daylight Time**

Reading Time: 10 minutes
Working Time: 2 hours and 30 minutes

- *You have 10 minutes to read all the papers and to familiarise yourself with the requirements of the questions. You must not write during this time.*
- *Monolingual and/or bilingual printed dictionaries may be consulted during the reading time and also during the examination.*

## Section 1: Listening and Responding (30 marks)

**Instructions to Students**

1. Allow approximately 40 minutes for Section 1.
2. Write all your answers to the questions in Section 1 in this booklet in black or blue pen. Space is provided for you to make notes.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

*© Victorian Curriculum and Assessment Authority 2019*

**Part A** (Questions 1–3)
(15 marks)

---

*Your response will be assessed on how well you:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information and convey the information accurately and appropriately.*

---

You will hear THREE texts. Each text will be played twice. There will be a short break between the first and second playings of each text. You may make notes at any time.

Listen carefully to each text and then answer the questions in ENGLISH.

**Marks**

You may make notes in this space. These notes will NOT be assessed.

**Text 1**

1. Why is the mother extremely happy? **3**

Marks | You may make notes in this space. These notes will NOT be assessed.

**Text 2**

2. (a) What information must Gowri convey to her father? **4**

(b) What characteristic do the speakers suggest Gowri's father has? Give evidence from the text to support your answer. **2**

Marks

You may make notes in this space. These notes will NOT be assessed.

**Text 3**

3. Listen to the conversation and identify the mother's and Vidhya's feelings. Provide reasons for these feelings. **6**

| Person(s) | Feeling | Reason |
|---|---|---|
| mother | | |
| Vidhya | | |
| mother and Vidhya | | |

**Part B** (Questions 4–6)
(15 marks)

---

*Your response will be assessed on how well you:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information and convey the information accurately and appropriately.*

---

You will hear THREE texts. Each text will be played twice. There will be a short break between the first and second playings of each text. You may make notes at any time.

Listen carefully to each text and then answer the questions in TAMIL.

**Marks**

You may make notes in this space. These notes will NOT be assessed.

**Text 4**

4. Summarise the ideas that the lyrics of the song by the poet Kannathasan convey to the Tamil community. **3**

கவிஞர் கண்ணதாசன் இப்பாடல் வரிகள்மூலம் தமிழ்ச் சமூகத்துக்கு வெளிப்படுத்தும் கருத்துக்களைச் சுருக்கமாகத் தருக.



PLEASE TURN OVER

Marks

You may make notes in this space. These notes will NOT be assessed.

**Text 5**

5. (a) What should Australian Tamils do in order to embrace a healthier lifestyle? **3**

ஒஸ்ரேலியத் தமிழர்கள் உடல்நலத்துடன் வாழ விரும்பினால் அவர்கள் என்ன செய்ய வேண்டும்?

- ______________________________

______________________________

______________________________

______________________________

- ______________________________

______________________________

______________________________

______________________________

- ______________________________

______________________________

______________________________

______________________________

(b) How do some places in Australia differ from Tamil-speaking countries? **2**

ஒஸ்ரேலியாவின் சில இடங்கள் எவ்வாறு தமிழ் பேசும் நாடுகளைவிட வேறுபடுகின்றன?

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

**Text 6**

| Marks | You may make notes in this space. These notes will NOT be assessed. |
|---|---|

6. (a) How did the grandmother benefit from this trip? **4**

இந்தப் பயணத்தின் மூலம் பாட்டி எவ்வாறு பயன்பெற்றுள்ளார்?

(b) Describe the person who cared for the grandmother. **3**

பாட்டியைப் பராமரித்தவரைப்பற்றி விபரிக்குக.

**End of Section 1**

BLANK PAGE

Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

# 2019 Public Examination

# Tamil
## Continuers Level

## Section 2: Reading and Responding (25 marks)

**Instructions to Students**

1. Allow approximately 1 hour and 10 minutes for Section 2.
2. Write all your answers to the questions in Section 2 in this booklet in black or blue pen.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

© Victorian Curriculum and Assessment Authority 2019

**Part A** (Questions 7–8)
(10 marks)

---

*Your response will be assessed on how well you:*

- *understand general and specific aspects of texts (for example, by comparing, contrasting, summarising and/or evaluating) and convey the information appropriately.*

---

7. Read the text and then answer in ENGLISH the questions that follow.

சிவபாதகலையகம்
மல்லிகைத்தீவு
**16–09–2019**
அதிபரூடாக
தலைவர்
பாட நூலாக்கக்குழு
ஐயா,

வரலாற்றுப்பாட நூல்களில் புதிய அத்தியாயங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுகோள்.

எமது பாடசாலையான சிவபாதகலையகத்தில் நாங்கள் வரலாற்றுப்பாடத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கற்றுவருவது நீங்கள் அறிந்ததே. இதனாற்றான் எமது பழைய மாணவர்கள் பலர், உலகின் பல்கலைக்கழகங்கள் பலவற்றில் விரிவுரையாளர்களாகவும் தொல்பொருள் ஆய்வாளர்களாகவும் சிறந்து விளங்குகிறார்கள்.

நாம் மெசப்பத்தேமிய நாகரிகம் **5000** வருடம் பழைமையானதென்றும் அதில் தமிழ் மொழியினதும் தமிழ்கலாச்சாரத்தினதும் பல அம்சங்கள் காணப்பெற்றன என்றும் தாங்கள் பதிப்பித்து வெளியிட்ட நூல்களில் கற்று வருகிறோம். நேற்று எமது ஆசிரியர், இந்தியாவின் மேற்கே, கடலடியில் கண்டுபிடிக்கப்பெற்றதும் சேறுபடிந்த நிலையில் உள்ளதுமான புராதன நகரங்களின் ஒளிப்பதிவை எமக்குக் காண்பித்தார். இவை **32 000** வருடங்களுக்கு முன்பு கட்டப்பெற்ற கல்லாலான கட்டடங்கள் என்றும் **15** சதுரகிலோமீற்றரைவிடப் பெரியவை எனவும் அறிந்து அனைவருமே வியப்பில் ஆழ்ந்துபோனோம். இவை அப்போதிருந்த நீண்ட ஆற்றுப்பள்ளத்தாக்குகளின் இருமருங்கிலும் அமைக்கப்பெற்றிருந்த ஸ்ரீ கிருஷ்ணரின் இராசதானி எனக்கருதப்படுகிறதாம்.

நாம் தொடர்ந்து இந்நகரங்கள் பற்றிய மேலதிகத் தகவல்களை அறிய மிகவும் ஆவலுடையோம். இவை கண்டுபிடிக்கப்பெற்றுப் பத்து வருடங்களுக்குமேலாகியும் இவைபற்றி ஆய்வு செய்யப்பெற்ற உறுதியான தகவல்கள் எதுவும் இன்னமும் எமது பாடப்புத்தகங்களில் இடம்பெறவில்லை. நாம் காப்பியங்கள் என்று கற்கும் பல விடயங்கள், குறிப்பாக இலக்கியத்தில் வரும் ஸ்ரீ கிருஷ்ணர், துவாரகாப் பட்டினம் என்பன உண்மையான வரலாற்றுச் சம்பவங்கள் என மாறிவருகிற நிலையில் இக்கண்டுபிடிப்புகள் பற்றிய மேலதிக விஞ்ஞானபூர்வமான சாட்சியங்களை அறியவும் தொடர்ந்து எதிர்காலத்தில் இவைதொடர்பான ஆய்வுகளில் ஈடுபடவும் எம்மில் பலர் பெருவிருப்பம் கொண்டுள்ளார்கள். ஆகவே எமக்கு உதவுமுகமாகத் தங்களது அடுத்த ஆண்டு வரலாற்றுப் பாடப்புத்தகங்கள் இவற்றையும் உள்ளடக்கியதாக வெளியிடப்பெற வேண்டும் என்று வினயமாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்
ச. பஞ்சாட்சரம்
செயலாளர்
சரித்திர குடியியற் கழகம்

QUESTIONS

**Marks**

(a) Why do the students think that the history textbooks should be rewritten? **2**

(b) Give **three** reasons why this school may be referred to as a 'history school'. **3**



PLEASE TURN OVER

8. Read the text and then answer in ENGLISH the questions that follow.

**வேகமான மாற்றங்கள்**

உலகம் வேகமாக மாறிவருகிறது. இவ்வுலகம் தோன்றிய காலம் தொடக்கம் மாற்றங்கள் தொடர்ந்து இடம்பெற்று வந்தாலும் இப்போது இம்மாற்றங்கள் ஏற்படும் வேகம் அதிகரித்துக்கொண்டு செல்கிறது.

ஆதிகால மனிதன் தான்பெற்ற உணவுப்பொருளைக் குத்திக்கிழிக்க ஒரு கூரான கல்லாயுதத்தையும் அவற்றை இடித்துச் சிறிய துண்டுகளாக்க இன்னொரு சப்பையான கல்லாயுதத்தையும் தனது இருகைகளிலும் வைத்திருக்கத்தொடங்கிய காலத்திலிருந்து ஒரேகல்லின் இருபக்கங்களிலும் ஒன்றைக் கூராகவும் மற்றையதைச் சப்பையாகவும் வைத்திருக்கலாம் என்று கண்டுபிடிக்க 10 000 வருடங்கள் எடுத்ததாகப் புதைபொருள் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

ஆனால் இன்று பொருள் ஒன்று சந்தைக்குவந்து அதன் நன்மை தீமைகளை அறிந்துகொள்ளமுன்னர் அது பயன்பாட்டில் இல்லாதுபோக அதைவிடப் புதிய பொருள்கள் அதனிடத்தைப் பிடித்துக்கொள்கிறன.

ஒலிப்பதிவு வரலாற்றை எடுத்துக்கொள்வோம். ஒலியைப் பதிவுசெய்து பின்னர் கேட்கக்கூடிய வசதி 1800 ஆண்டுவரை இருந்திருக்கவில்லை. ஒலியைப்பதிவுசெய்து பின்னர் கேட்கக்கூடிய கிறமபோன் *gramophone* எனப்படும் கருவி கண்டுபிடிக்கப்பெற்று, அது ஏறக்குறைய 150 வருடங்களுக்கு மேலாகப் பாவனையில் இருந்தது. 1980 களில் டிஜிற்றல் தொழில்நுட்பம் ஆரம்பிக்கப்பெற்ற பின்னர் இன்றுவரை முறையே ஒலிப்பதிவு நாடா, ஒலி வட்டு, யூஎஸ்பி, மிகச்சிறிய 'சிப்' எனத் தொடர்ந்து விரைவான மாற்றங்கள் ஏற்பட்டவண்ணம் உள்ளன.

இன்றைய கைத்தொலைபேசிகள் பல்வேறு சாதனங்களின் தொகுப்பாக அமைந்து பயன்படுத்துபவர்களின், குறிப்பாக இளைஞர்களின் கைவிரல்களின் உபயோக முறையை, அவர்களின் பெற்றோர்கள் பயன்படுத்தும் முறைகளிலிருந்து பெரிதும் வேறுபடச் செய்துள்ளன. இளைஞர்கள் தமது பெருவிரல்களை இடம் வலம் என்ற வேறுபாடெதுவுமின்றிச் சமமாகவும் மற்றைய விரல்களைவிட அதிகமாகவும் உபயோகித்துத் தமது கைத்தொலைபேசிகளை இயக்கிறார்கள். இவர்களது எளிமையான அடிப்படைக்கணித வாய்பாடுகளை மீட்கும்திறன்களும், வரைபடங்கள் ஆகியவற்றுடன் தொடர்பான இடங்கள்பற்றிய அவசியமான எண்ணக்கருக்களும், சொற்களை எழுத்துக்கூட்டிச் சரியாக எழுதும் திறன்களும் குறைந்து போகின்றன.

தமது சொந்த வங்கிக்கணக்கிலக்கம் போன்ற அவசியத் தகவல்கள்கூட இவர்களுக்கு ஞாபகத்திலிருப்பதில்லை.

இவர்கள் உறவினர், நண்பர்களுடன் நேரிற்பேசி மகிழ்ச்சியடைவது குறைவு. மாறாகக் கைத்தொலைபேசிகளில் குறியீடுகளைப் பயன்படுத்திச் செய்திப்பரிமாற்றம் செய்தும், திரை அடிப்படையிலான விளையாட்டுக்களை விளையாடியும், பாடல்களைக்கேட்டும், காட்சிகளைக்கண்டும் இருந்தஇடத்திலிருந்தே தமது பொழுதைக் கழிக்கிறார்கள். இதனால் இவர்களது உடற்பருமன் அதிகரிப்பதுடன் இளம்வயதிலேயே கண்ணாடிகளை அணியும் தேவையும் ஏற்பட்டுவிடுகிறது. நோய்களும் ஏற்பட்டுவிட வாய்ப்புண்டு.

மாற்றங்கள் எல்லாம் நன்மைபயக்கின்றனவா என்ற ஐயம் மனதில் குழப்பத்தை உண்டுபண்ணுகிறது.

QUESTIONS

**Marks**

(a) Explain the techniques that the writer uses to describe the speed of change. **2**

(b) Complete the table below using the information provided in the article. **3**

| What young people do now | | Consequences of their behaviour |
|---|---|---|
| physically | • | • |
| mentally | • | • |
| socially | • | • |



PLEASE TURN OVER

**Part B** (Question 9)
(15 marks)

*Your response will be assessed on how well you:*
- *demonstrate an understanding of the stimulus text*
- *write text appropriate and relevant to context, purpose and audience*
- *structure and sequence information and ideas*
- *manipulate language structures and vocabulary in Tamil.*

9. Read the text and then answer the question in approximately 150 words in TAMIL on page 8.

**இன்றைய இளைஞர் – நேர்காணல்**

*எமது 'பிரதிபலிப்பு' பத்திரிகை நிருபர் நேற்று நடைபெற்ற மாநில விளையாட்டுப்போட்டி முடிவடைந்தபின் 200மீ ஓட்டப்போட்டியில் முதலிடம் பெற்ற வாசுகியைப்பேட்டி கண்டிருந்தார். அந்தப்பேட்டியைக் கீழே காண்கிறீர்கள்.*

நிருபர்: வணக்கம் வாசுகி கந்தசாமி

வாசுகி: வணக்கம் ஐயா

நிருபர்: எமது பத்திரிகை வாசகர்கள் சார்பாக உங்கள் வெற்றிக்கு எமது பாராட்டுக்கள்.

வாசுகி: மிக்க நன்றிகள்

நிருபர்: மாநில மட்டத்தில் வென்றிருக்கிறீர்கள் உங்கள் மனநிலை எப்படியிருக்கிறது?

வாசுகி: ம்... சந்தோஷமும் கவலையும் கலந்திருக்கிறது.

நிருபர்: வெற்றியில் கவலை கலப்பதற்குக் காரணம் என்ன?

வாசுகி: வெற்றி பெற்றது சரி ஆனால் கலந்துகொள்ளப்பட்டபாடு மிகக் கஷ்டம்.

நிருபர்: என்ன பாடுபட்டீர்கள் என்று அறியலாமா?

வாசுகி: வட்டாரமட்டத்தில் நான் முதலிடம்பெற்ற சான்றிதழில் இருந்த எழுத்துக்கள் மழைநாளொன்றில் எமது ஓலைக்கூரை ஒழுகி நனைந்து அழிந்துவிட்டன. வட்டார அதிகாரி சான்றிதழ் தெளிவில்லையென்று இங்கே தலைநகருக்குப் போட்டிக்கு வருவதற்கான இலவச போக்குவரத்துச் சீட்டைத் தரமறுத்துவிட்டார். பிறப்புச்சான்றிதழ்ப் பிரதியும் கிடைக்கவில்லை.

நிருபர்: ஆ... பின்னர் என்ன நடந்தது?

வாசுகி: எமது மிகவும் பின்தங்கிய கிராமப் பாடசாலை அதிபரே பாடசாலையில் இருந்த பிறப்புச்சான்றிதழையும் தந்து அழிந்துபோன பெயர் என்னுடையது என்பதையும் உறுதி செய்துதந்ததுடன் எனது பயணச்செலவையும் தனது சொந்தப்பணத்தில் தந்து அனுப்பிவைத்தார்.

நிருபர்: அந்த அதிபரின் பெயர்?

வாசுகி: அவர் பிரபலங்களை விரும்பமாட்டார். ஆனால் அவரே என்னுடையதும் இன்று நீளம்பாய்தல் போட்டியில் முதலிடம்பெற்ற எனது பாடசாலையைச் சேர்ந்த கபிலனது வெற்றிக்கும் முழுக்க முழுக்கக் காரணமாக இருந்தவர்.

நிருபர்: சரி... வெற்றிக்கோட்டைக் கடந்தவுடன் விழுந்த நீங்கள் ஏன் அதிகநேரம் எழுந்திருக்கவில்லை?

வாசுகி: பலவீனம், களைப்பு வீட்டில் ஒருநேர உணவுக்கே வழியில்லை...

மிகுதி அடுத்த இதழில்...

QUESTION

You read the text of this interview a few days ago. As a Tamil youth representative, now you have an opportunity to deliver a persuasive speech to a meeting of Tamil community leaders. Write the script of your speech to persuade them to take serious action to fix the issues mentioned in the interview that the competitors have to face.

நீர் சில நாட்களுக்கு முன்னர் இந்தப்பேட்டியை வாசித்திருந்தீர். தற்போது தமிழச் சமூகத்தலைவர்களிடையே உரையாற்றும் சந்தர்ப்பம் ஒன்று உமக்குக் கிடைத்துள்ளது. இப்பேட்டியில் குறிப்பிடப்பெற்றதும், போட்டியாளர்களுக்கு ஏற்படுவதுமான பிரச்சனைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அவர்களைத் தூண்டும் வகையில் நீர் ஆற்றவுள்ள உரைக்கான பனுவலைத் தயார்செய்க.

---

You may make notes in this space. These notes will NOT be assessed.

*Do not remove this page from the question booklet.*

| Student/Registration Number | | | | | | | | | | | | Tamil Continuers Level |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

| Centre Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|

Question 9

**End of Section 2**

BLANK PAGE

Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

# 2019 PUBLIC EXAMINATION

# Tamil

## Continuers Level

### Section 3: Writing in Tamil (20 marks)

**Instructions to Students**

1. Allow approximately 40 minutes for Section 3.
2. Write your answer to a question from Section 3 in this booklet in black or blue pen. Space is provided for you to make notes.
3. You must answer ONE question in TAMIL.
4. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
5. All question booklets will be collected at the end of the examination.

© Victorian Curriculum and Assessment Authority 2019

**Section 3** (Questions 10–12)
(20 marks)

---

*Your response will be assessed on how well you:*
- *demonstrate depth of treatment of information, ideas and/or opinions*
- *write text appropriate and relevant to context, purpose and audience*
- *structure and sequence information and ideas*
- *manipulate language structures and vocabulary in Tamil.*

---

Answer ONE question from this section in approximately 250 words in TAMIL.

10. Some members of the older generation of the Tamil community say that 'selfless attitudes are on the decline among Tamils'. As a young Tamil leader, write an evaluative report about this statement for a magazine published by the Tamil Students' Union.

    'தமிழர்களிடையே பொதுநல மனப்பாங்கு வரவரக் குறைவடைந்து செல்கிறது' என்று மூத்த தலைமுறைத் தமிழர்கள் சிலர் தெரிவிக்கிறார்கள். இக்கூற்றை மதிப்பீடுசெய்து ஒரு இளந் தமிழ்த் தலைவர் என்ற வகையில் தமிழ்மாணவர் ஒன்றியத்தினர் வெளியிடும் சஞ்சிகைக்கு ஓர் அறிக்கை எழுதுக.

11. It has become challenging to identify a person's country and region of origin based on that person's Tamil dialect. Write a descriptive article about this for a Tamil magazine published in Australia.

    ஒருவர் எந்நாட்டைச்சேர்ந்தவர் எப்பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று அவரது தமிழ்ப் பேச்சுவழக்கைக்கொண்டு அறிக்கூடியதாக இருந்த நிலை இப்போது சிரமமாகிவிட்டது. என்ற தலைப்பில் ஒரு விவரணக் கட்டுரையை ஒஸ்ரேலியாவிலிருந்து வெளிவரும் ஒரு சஞ்சிகைக்கு எழுதுக.

12. Write a reflective, thought-provoking script of a play to be published in a Tamil Nadu magazine. One person in the play thinks that teledramas that are broadcast now have an adverse effect on audiences rather than a positive effect, while the other person has a contrasting opinion.

    தற்போது ஒளிபரப்பப்படும் தொடர் நாடகங்கள் பார்ப்பவர்களுக்கு நன்மைகளைவிடத் தீமைகளையே அதிகம் விளைவிக்கின்றன என்ற கருத்துடைய நடிகர் ஒருவரும் அதற்கு மாறான கருத்துடைய இன்னொருவரும் தமது கருத்துக்களைக் காரசாரமாக வெளிப்படுத்துகின்ற நாடக உரையாடற் பனுவலைத் தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் இளைஞர் மலரில் வெளியிடுவதற்காக எழுதுக.

You may make notes in this space. These notes will NOT be assessed.

Question Number:

**End of Section 3**